**சுற்றறிக்கை இல. 21/2017**

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாண கல்வி பணிப்பாளர்கள்,
சகல வலய கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்ட பொறுப்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் / உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பிரிவேனாதிபதி குருமார்கள்,
சகல அதிபர்கள்.

**பாடசாலைகள், பிரிவேனாக்கள் மற்றும் சகல கல்வி நிறுவனங்களுக்கும் இணையத்தள வசதி வழங்கல்.**

1. நவீன தகவல் தொழினுட்ப புரட்சியுடன் தற்போதைய உலகம் எண்சார் சமூகமாக (Digital Society) வளர்ச்சி அடைந்துள்ளது. அவ்வாறான எண்சார் சமூகத்துக்குப் பொருத்தமான எண்சார் குடிமக்களாக (Digital Citizen) எதிர்காலத்தில் இலங்கை மாணவர் பரம்பரையாக ஆக்குவதற்காக தேவையான தகவல் தொழினுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழே பாடசாலை மற்றும் பிரிவேனாக்கள் இணையத்தில் நூழையும் வாய்ப்பை உருவாக்குவது பிரதானமான தேவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்த இணையத்தள தொடர்பு மிகவும் வேகமாகவும், பாதுகாப்பு மற்றும் ஏற்கத் தக்க செலவு கொண்டதாக இருக்க வேண்டும். அத்தகைய இணையத் தளத்தைப் பொருத்துவதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் இந்த சுற்றறிக்கையுன் வழங்கப்படுகின்றது.

2. இந்த இணையத்தள வசதி வழங்கலுக்கான நடவடிக்கைகள் ஒருங்கிணைத்தல் மற்றும் இணையத்தளம் சம்பந்தபட்டவைகளை உரியவாறு பயன்படுத்தல் தொடர்பாகவும், கண்காணிப்பு மற்றும் ஒழுங்கு முறைக்கு அமைய பொறுப்புகூறுதல் கீழ்வருமாறு.

    i. தேசிய மட்டம் - கல்வி அமைச்சில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப கல்விப் பணிப்பாளர்.
    ii. மாகாண மட்டம் - மாகாண தகவல் மற்றும் தொடர்பால் தொழினுட்ப ணருங்கிணைப்பு அலுவலர்.
    iii. வலய மட்டம் - வலய தகவல் மற்றும் தொடர்பால் தொழினுட்ப ணருங்கிணைப்பு அலுவலர்.

3. அரசாங்க பாடசாலைகள்.
    1. பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவத்தை வலுப்பத்தும் முகமாக 2013. 11. 28 ம் திகதி வெ ளியிடபடபட்ட இல. 2013/07 கொண்ட சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டிக் கைநூல் இல. 12 இல் கீழ் தரப்பட்டுள்ள பாடசாலை கொள்முதல் செயற்பாடுக்கு உரிய அறிவுறுத்தல்களின்படி, பாடசாலையின் தேவைப்பாடுகளை பிழையின்றி அடையாளம் கண்டு பாடசாலைக்குப் பொருத்தமான இணையத்தள தொடர்பை தெரிவு செய்வதற்கு இந்த புதிய அறிவுறுத்தல் ஏட்டில் மூலம் தேவையான வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே, பாடசாலைக்கு இணையத்தள வசதிகள் வழங்குதன் பொருட்டு இதற்கு முன்னர் பயன்படுத்திய நடைமுறையில் காணபட்ட குறைகளைக் களைந்து, உரிய கட்டணம் வழங்குவதற்கு தேவையான அறிவுரைகளும் இதில் தரப்பட்டுள்ளன.

    2. இணையத்தள வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் பில்களுக்குப் பணம் செலுத்துவதற்கும் குறித்த பாடசாலையால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறையை பின்பற்ற வேண்டும்.

        i. இந்த சுற்றறிக்கையுடன் வழங்கப்பட்டுள்ள பாடசாலைக்கு இணையத்தள வசதிகள் வழங்கல் வழிகாட்டி கைநூலின் அறிவுறுத்தலுக்கு அமையவும் 2013/07 ம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலை கொள்முதல் செயற்பாட்டு வழிமுறைகளை பின்பற்றி பாடசாலைகளுக்கு பொருத்தமான இணையத்தளத்தை தெரிவு செய்தல். இதற்கு தொழினுட்ப உதவியை பாடசாலை மதிப்பீட்டுக் குழுவிலிருந்து பெறப்பட வேண்டும், அவ்வாறு பெற்றுக்கொள்வது இயலாததாக இருந்தால் வலய

கட்புல மற்றும் வலைப்பின்னல் பிரச்சினை தீர்த்தல் குழு ஆசிரியர்களின் உதவியைப் இதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ii. இணையத்தள வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு செலுத்தப்பட வேண்டிய மாதாந்த கட்டணத்தை பாடசாலையால் வருடாந்த அபிவிருத்தி திட்டமிடலின் மறுசீரமைப்புச் செலவின் கொண்டு செல்லப்படும் செலவு விடயம் இல. REx 3.2 இன் கீழ் பாடசாலை வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளிட்டு இந்த பில் கொடுப்பனவுகளைச் செய்வதற்குத் தேவையான மாதாந்த நிதியொதுக்கீட்டை தீட்டிக் கொள்வதற்கு ஆண்டுதோறும் ஆவன செய்ய வேண்டும்.

iii. இந்த பில்களுக்குப் பணம் செலுத்தல் பற்றிய விபரம் வேறாக கோப்பிடப்பட்டு பேணி வரல் வேண்டும்.அத்துடன் 2013/07 சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின்படி இணையத்தள இணைப்புக் கட்டணம் தொடர்பிலும் கணக்கு வைத்திருக்க வேண்டும்.

4. பிரிவேனா மற்றும் பிற கல்வி நிறுவனங்கள்.

   1. இந்த வழிகாட்டி நூலில் காட்டப்பட்டுள்ள இணையத்தள பக்கேஜுக்கு உரிய விபரக் குறிப்புகள் தற்போது பாடசாலைகளில் நிலவும் தேவைப்பாடுகளை பரிசீலனை செய்ததன் ஊடாக தயாரிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளை விட பிரிவேனாக்கள் மற்றும் கல்வி அமைச்சின் கீழ்வரும் னைய கல்வி நிறுவனங்களில் இணையத்தள வசதிகளை பரிசீலனை செய்து இந்த வழிகாட்டி நூலின் அறிவுறுத்தல்கள் மற்றும் ஒழுங்குகள் வரையப்பட்டுள்ளன.

   2. இந்த விபரக் குறிப்புகளுக்கு வேறான தேவைப்பாடுகள் நிலவும் சமயத்தில் கொள்வனவு அறிவுறுத்தல்களைப் பின்பற்றி விபரக் குறிப்த் தயார் செய்து இணையத்தள வழங்கலை மேற்கொள்ள வேண்டும். பிரிவேனா மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களால் பெற்றுக் கொள்ளப்படும் இணையத் தளத்துக்கு அந்த நிறுவனங்களால் மாதாந்த பில் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

5. பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு இணையத்தள வசதிகளை பரிசீலனை செய்தல் சம்பந்தமாக இதுவரை வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் ஆலோசனைகளை பின்தள்ளி இனிமேல் இந்த சுற்றறிக்கையின் ஒழுங்கு மற்றும் விதிமுறைகள் வலிமையானதாக இருக்கும். என்று அறியத் தருகிறோம்.

சுனில் ஹெட்டியாராச்சி
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் -

01. கணக்காளர் நாயகம்
02. கல்வி அமைச்சின் சகல மேலதிக செயலாளர்கள்.
03. தலைமை ஆணையாளர் (ஆசிரியர் கல்வி), கல்வி அமைச்சு
04. சகல கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அமைச்சு
05. சகல மாகாண தகவல் தொழினுட்ப இணைப்பு அலுவலர்கள்
06. சகல வலய தகவல் தொழினுட்ப இணைப்பு அலுவலர்கள்
07. சகல கணினி வள மையங்களின் பொறுப்பு ஆலோசகர்கள்

**சுற்றறிக்கை இல. 21/2017(I)**

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாண கல்வி பணிப்பாளர்கள்,
சகல வலய கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்ட பொறுப்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் / உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பிரிவேனாதிபதி குருமார்கள்,
சகல அதிபர்கள்.

**பாடசாலைகள், பிரிவேனாக்கள் மற்றும் சகல கல்வி நிறுவனங்களுக்கும் இணையத்தள வசதி வழங்கல்**.

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2017/06/21 ம் திகதிய கல்விச் சுற்றறிக்கையின் 2 ம் வாசகம் தொடர்பில் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. அந்த சுற்றறிக்கையின் இணைப்பு 02, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திருத்த இணைப்பு 02 இன்படி திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

சுனில் ஹெட்டியபராச்சி
செயலாளர்,
கல்வி அமைச்சு.

1.0 ஒட்டுமொத்த கல்வி முறைமையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப பயன்பாட்டைப் பொருத்துவதை இலக்காகக் கொண்டு பாடசாலைகளுக்கு இணையத் தொடர்பை வழங்கப்படுகிறது. அதன் மூலம் கீழ் வரும் நோக்கங்களை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**குறுங்கால நோக்கம்**

- இணையத்தில் நிலவும் வளங்களுக்குள் நுழைதல்
- கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உள்நோக்கம் வழங்கல்
- கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் தரத்தை அபிவிருத்தி செய்தல்.
- இற்றைப்படுத்தப்பட்ட அறிவில் நுழையும் வாய்ப்பை ஏற்படுத்தல்.
- புத்தாங்கங்களை உருவாக்க மாணவரை ஊக்குவித்தல்.
- ஆசிரியர் மாணவர் தொடர்பாடலுக்கு ஊடகமொன்றை வழங்கல்.
- பாடசாலையில் கற்றல் முறைமைகளை அதிகமாகப் பயன்படுத்த வாய்ப்பளித்தல்.
- கல்வி முகாமைத்துவத்துக்கு உரிய செயற்பாடுகளுக்குப் பயன்படுத்த ஊக்கமளித்தல்.
- 

**நடுத்தரகால நோக்கம்**

- பாடசாலைகளில் புதிய ஆங்கங்களை உருவாக்கல்.
- புதிய அறிவால் இற்றைப்படுத்தப்பட்ட ஆசிரிய சமூகத்தை உருவாக்கல்.
- சுய கற்றல் மூலம் அறிவைத் தேடிச் செல்பவராகச் செய்தல்.
- விமர்சன கற்றல் வாய்ப்புக்கு மாணவரை தொர்புபடுத்தல்.
- மாணவரிடையே அறிவுப் பரிமாற்றம்.
- முறையான மதிப்பீட்டு செயல்முறையைக் கட்டியெழுப்புதல்.
- குறித்த செயற்பாடுகளால் கல்வி முகாமைத்துவத்தை வலுப்படுத்தல்.

**நெடுங்கால நோக்கம்.**

- எதிர்கால தொழில் உலகுக்கு இசைவான மாணவ சந்ததியை உருவாக்கல்.
- தொழினுட்பத் தகைமை கொண்ட குடிமக்களை உருவாக்கல்.
- கணினி அறிவை மேம்படுத்தல்.
- எண்சார் பகிர்வை (Digital divide) குறைத்தல்.
- ஆண் பெண் சமத்துவம் (Gender Equity).
- பண்பு நிறைந்த ஆற்றல்மிக்க சமூக வலைப்பின்னலை உருவாக்குதல்.
- கல்வி முகாமைத்துவ தகவல் முறைகளில் இணைக்கப்பட்ட பாடசாலை முறைமையை நிறுவுதல்.

## 1.1 பாடசாலை இணையத்தைப் பயன்படுத்தற் கொள்கை (School Internet Usage Policy)

பாடசாலைகளில் இணையத்தைப் பயன்படுத்தும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும்.

- பொருத்தமற்ற இணையத்தைப் பொருத்துவதை தவிர்ப்பதற்காக Web-filtering Software மூலம் தடுக்கப்பட்டு பாடசாலைகளுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டியேற்படும். அந்த பாதுகாப்பு முறையை மீறி செயற்படக் கூடாது.
- ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகிய இருபகுதியினருக்கும் இணையத்தைப் பயன்படுத்துவது சம்பந்தமாக பயிற்சியளித்தல் மற்றும் விளக்கமளித்தல் கல்வி அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகம் மற்றும் பாடசாலை மூலமாக வழங்கப்படும்.
- கற்றல் செயற்பாடுகளுக்கு வெளியிலிருந்து பெற்ற, அனுமதிக்கப்படாத மென்பொருளை பதிவேற்றம் (Upload) மற்றும் பதிவிறக்கம் (Download) செய்வதற்கு அனுமதி இல்லை.
- வைரஸ்தடுப்பு மென்பொருள் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்ப படல் வேண்டும்.
- ஆசிரியர்களின் அனுமதியின்றி எந்தவொரு சேமிப்பு ஊடகத்தையும் (CD, DVD, Pen Drive, etc) பயன்படுத்தக் கூடாது.
- பாடசாலைக்கு அல்லது பாடசாலை மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு இழுக்கு ஏற்படாதா வண்ணம் இணையத்தைப் பயனபடுத்த வேண்டும்.
- சட்ட முரணான, பொருத்தமற்ற வெப் தளங்களுக்குள் கற்பனை பண்ணி நுழையக் கூடாது.
- திடிரென்று, தெரியாத்தனமாக அல்லது தவறாக ஒரு மாணவர் அவ்வாறான பொருத்தமற்ற வெப் தளத்தில் நுழைந்தால் அது தெமதாடர்பாக உடனடியாக நிர்வாக ஆசிரியரியருக்கு (Administrator) அறிவிக்க வேண்டும்.
- மாணவர்கள் கல்வித் தேவைக்காக மாத்திரமே இணைய வசதிதை பயன்படுத்த வேண்டும்.
- இணையத்தின் ஊடாக (வெப் தளத்தில் அல்லது வேறு ஊடகங்களில்) யாதேனும் தகவலை பதிவிறக்கம் செய்து வேறு தேவைக்காக பயன்படுத்த வேண்டுமானால் அதன் வெளியீட்டு உரிமை குறிப்பிடப்படல் வேண்டும்.
- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனிப்பட்ட தகவல்களை இணையத்தில் பதிவிடுதலை அல்லது வெளியிடுதலைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

- பாடசாலையின் தகவல் தொழினுட்ப கொள்கையை மீறி எந்தவொரு வெளியீட்டை செய்யக் கூடாது.
- இணையத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சகல செயல்களும் ஆசிரியர்களின் கண்காணிப்புக்கும் கட்டுப்படுத்தலுக்கும் உட்பட்டது என்பதை மாணவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

## 1.2 <u>மின்னஞ்சல் (E-Mail)</u>

- ஆசிரியரின் அனுமதி மற்றும் கட்டுப்பாட்டின் பேரில் பாடசாலையில் மின்னஞ்சலைப் பயன்படுத்த வேண்டும்.
- சட்ட விரோத அல்லது பொருத்தமற்ற அல்லது வேறு யாருக்கும் தொந்தரவு ஏற்படுத்தும் எந்தவொரு தகவலையும் மின்னஞ்சல் மூலம் பரிமாற்றம் செய்தல் ஆகாது.
- தனது அல்லது வேறு எவரதும் தனிப்பட்ட தகவல்களை (முகவரி, தொலைபேசி இலக்கம், நிழற்படம்) மின்னஞ்சல் ஊடாக பரிமாற்றம் செயல் ஆகாது.
- மின்னஞ்சல் மூலமாக அல்லது இணையம் மூலமாக அறியப்பட்ட எந்தவொரு தனிநபருடனும் நேருக்கு நேர் விவாதம் செய்தல் ஆகாது.
- மின்னஞ்சல் மூலம் இணைப்புகளை அனுப்பும்போது ஆசிரியரின் அனுமதியுடன் அனுப்ப வேண்டும்.

## 1.3 <u>இணையத்தில் அளவளாவுதல் (Internet Chat)</u>

- இணையத்தில் அளவளாவுவதற்கு பாடசாலையில் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.
- கல்வி விடயங்களுக்கு மாத்திரம் இணையத்தில் அளவளாவுதலை மேற்கொள்ள முடியும், அதுவும் ஆசிரியரின் கட்டுப்பாட்டுக்குள் இடம் பெற வேண்டும்.

## 1.4 <u>வெப் தளம் )Web Site)</u>

- அனுமதிக்கப்பட்ட பாடப் உள்ளடகத்தை மாத்திரமே பாடசாலையின் வெப் தளத்தில் வெளியிடுவதற்கு மாணவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்.
- வெப் தளத்தில் மாணவரின் தகவல், நிழற்படம் மற்றும் ஆக்கத்தை வெளியிடுவதானால், அதற்கு பெற்றோரின் அனுமதியைப் பெற்றுக் கோண்ண வேண்டும்.
- அனுமதியுடன் பாடசாலை வெப் தளத்தில் மாணவரின் ஆக்கத்தை வெளியிட்டால், அதன் உரிமை மாணவருக்கே உரியது.

## 1.5 <u>தனிப்பட்ட கருவி - Personal Device</u>

- இணைய பயன்படுத்தல் கொள்கைக்கு அமைய மாணவர் தமது தனிப்பட்ட கருவிகளைப் பயன்படுத்தி நிழற்படம் அல்லது வீடியோ எடுத்தல், அனுப்புதல், இணையத்தில் நுழைதல் முதலான செயல்களை பாடசாலையில் மேற்கொள்ள முடியாது.

**மேற்கூறப்பட்ட அறிவுறுத்தல்கள் மீறப்படும் சந்தர்ப்பங்களில்,**

- ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் (எழுத்து மூலமான எச்சரிக்கை, குறுகியகால இணைய நுழைவுத் தடைசெய்தல் முதலியன).
- இவ்வாறான தவறான செயல்களை தொடர்ந்து செய்தால் மேலதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யப்படும்.

இந்த அறிவுறுத்தல்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ள இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள இணையத்தைப் பயன்படுத்தல் தொடர்பில் மாணவர் அறிவுறுத்தல் கையேட்டானது இந்த வசதியைப் பயன்படுத்தும் மாணவர்களுக்குக் கொடுத்து, அது தொடர்பில் விளக்கப்படுத்தி, அந்த அறிவுறுத்தல் கையேட்டைப் பின்பற்றுகைக் கூறும் மாணவர் மற்றும் பெற்றோரின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பாடசாலையில் இணையத்தைப் பயன்படுத்தும் கொள்கைத் திட்டத்தை சகல மாணவர்களுக்கு எப்போதும் அறிவித்துக் கொண்டிருக்க வேண்டும். அது சம்பந்தமான அறிவுறுத்தல் கையேட்டை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் நன்றாக்க் காணக்கூடிய இடத்தில் காட்சிப்படுத்த வேண்டும்.

## 2.0 <u>பாடசாலைக்குப் பொருத்தமான இணைய தொகுப்பை பெற்றுக்கொள்ளல்</u>.

கல்வி அமைச்சினால் பரிந்துரை செய்யப்பட்ட இணைப்பு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள இணையத் தொகுப்புகளில் (பெக்கேஜ்) பொருத்தமான தொகுப்பை அதில் குறித்த விலையில் இணைய சேவை வழங்குநரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

பாடசாலைக்கு பொருத்தமான இணையத் தொகுப்பு பெக்கேஜை தெரிவு செய்யும் போது கீழ்க் காணப்படும் தேர்வளவை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

- இணையத்தை பொருத்துவதற்கு ஒரு தடவையில் இணைக்கக் கூடிய கணினிகளின் அதியுச்ச எண்ணிக்கை (பாடசாலையில்)

- பாடசாலையால் இணையத் தொகுப்பு ஊடாக பெற்றுக்கொள்ள விரும்பும் சேவைகள்.
- ஒரு மாதத்தில் பாடசாலையால் இதற்காக வழங்கக் கூடிய அதியுச்ச நிதி.
- தற்போதும் இணைய தொகுப்பு உள்ளதாயின் அந்த தொகுப்பை கொண்டு நடத்துவது அல்லது இந்த புதிய இணையத் தொகுப்புக்கு மாறுவதை தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளும் ஆற்றல்.
- பாடசாலையின் தேவைக்கேற்ப எத்தனை இணையத் தொகுப்பையும் பயன்படுத்தும் ஆற்றல்.
- பாடசாலை அமைந்திருக்கும் பிரதேசத்தில் மிகவும் நல்ல கவரேஜ் (Coverage) செய்யும் இணைய வழங்குநரை அடையாளம் காணல்.
- தறபோது குறித்த பிரதேசத்தில் கவரேஜ் ஆகும் மிக நல்ல செயற்றிறனுள்ள தொழினுட்பத்தை அமையாளம் காணல் ( உதா - 4G Broadband, ADSL, WiMax, ...).
- பாடசாலையால் தீர்மானிக்கப்படும் இணையத் தொகுப்பைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்றவாறு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு குறித்த நிறுவனங்களின் தொடர்பு அலுவலர்களின் தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி இணைப்பு 3 இல் தரப்பட்டுள்ளன.

இணைப்பு 2 இல் பெக்கேஜை தெரிவு செய்தல் சம்பந்தமாக விசேட விடயங்கள் குறிப்பிடப்பட்டு இருந்தால் அந்த விடயங்களை கவனத்தில் எடுத்துபக் கொள்ள வேண்டும்.

மேலே தேர்வளவின் கீழ் பாடசாலை தேவைக்கு மிகவும் பொருத்தமான இணையத் தொகுப்பு மற்றும் சேவை வழங்குநரை பாடசாலை கொள்வனவுக் குழு மூலம் தெரிவு செய்ய வேண்டும். இதற்குத் தேவையான தொழினுட்ப உதவியை வலய வன்பொருள் மற்றும் வலைப்பின்னல் தீர்வுக் குழு மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

- பாடசாலையில் கணினி பயன்படுத்தும் விசாலமான ஒரு இடத்தினை இணையத் தொகுப்பு நிறுவுவதற்கு தெரிவு செய்ய வேண்டும்.
- Router (திசைவி), Serial number, தொகுப்பு வழங்கப்பட்ட திகதி மற்றும் Circuit ID போன்ற தகவல் உட்பட சம்பவத்திரட்டு ஏட்டில் (லொக்புக்) குறிக்கப்படல் வேண்டும்.
- Router (திசைவி) பொருட் பதிவேட்டில் பதியப்படக்கூடாது. அத்துடன் இந்த தகவல் உள்ளடங்கிய கோப்பு ஒன்றை இணைய தொகுப்பு தொடர்பில் பேணிவரல் வேண்டும்.

## 2.1 இந்த இணைய சேவையுடன் வழங்கப்படும் ஏனைய சேவைகள்.

- Web filtering சேவை.

## 2.2 இணைய தொகுப்புக்கு அறவிடப்படும் கட்டணம் மற்றும் செலுத்து முறை.

1. ஆரம்ப நிறுவுதல் கட்டணம் (Router கருவிக்குரிய சேவைக கட்டணத்திடன்).
   - இந்த இணைத் தொகுப்பு பக்கேஜ் யாவும் ஆரம்ப நிறுவுதல் கட்டணம் இல்லாமல் வழங்கப்படும்.
   - இந்த இணைய தொகுப்புக்கு உரிய ஆரம்ப நிறுவுதல் செய்த பின்னர், அந்த தொகுப்பு உரிய முறையில் செயல்படுகிறது என்ற அறிக்கையை அதிபர் க்கல்வி அமைச்சின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப கிளைக்கு நகலுடன், வலய தகவல் தொழினுட்ப இணைப்பு அலுவலருக்கு வழங்க வேண்டும். (அது சம்பந்தமாக இணைப்பு 4 ஐப் பயன்படுத்தவும்).
   - ஆரம்ப நிறுவுதலுக்கு ஏற்றவாறு பொருத்தப்பட்ட Router கருவி குறித்த இணைய சேவை வழங்குநருக்கு சொந்தமானதாகும்.

2. மாதாந்த பில் கட்டணம்
   - மாதாந்த கட்டணம் குறிக்கப்பட்ட பில் குறித்த சேவை வழங்குநரால் பாடசாலைக்கு வழங்கப்படும்.
   - இந்த மாதாந்த கட்டணம் அடங்கிய பில்லுக்கு உரிய கட்டணத்தை பாடசாலை குறித்த சேவை வழங்குநருக்குச் செலுத்த வேண்டும்.
     இந்த மாதாந்த கட்டணத்தை செலுத்துதல் தொடர்பு குறித்ததான செலவு 2013/07 இலக்க சுற்றறிக்கையின் அறிவுறுத்தலுக்கு அமைய பாடசாலை தயாரிக்கும் ஆண்டுக்கான வேலைத் திட்டத்தில் உள்ளிட்டு அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. மேலதிய தரவு பயன்டுத்தல்
   - மேலதிக தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் முகாமைத்துவ குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
   - அந்த மேலதிய செலவை பாடசாலையே பொறுப்பேற்க வேண்டும்.
   - இது தொடர்பிலான கட்டணம், பெற்றுக் கொண்ட பெக்கேஜுக்கு அமைய வழங்கப்பட்டுள்ள இணைப்பு 02 இல் குறிப்பிட்டுள்ளவாறாகும்.

## 2.3 <u>பெற்றுக் கொண்ட இணைய சேவை வழங்கலை பயன்படுத்தி பெற்றுக் கொள்ளக் கூடிய சேவைகள்.</u>

இந்த இணையத் தொடர்பை பாடசாலை வேளையின் பின்னரும் பாடசாலை விடுமுறை நாட்களிலும் வெளிப் பயனாளிகளுக்கு சேவை வழங்குவதற்கு பயன்படுத்த முடியும். வெளியாருக்கு வழங்குவதற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய அறவீடு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 2005/29 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமையவும் பாடசாலை முகாமைத்துவக் குழுவின் அனுமதியுடனும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 2.4 <u>பாடசாலை இணையத்தை உகந்த முறையில் பயன்படுத்தல் தொடர்பான பயிற்சி.</u>

பாடசாலை முறைமையில் இணையத்தைப் பயன்படுத்தி மிகவும் சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடு இடம்பெறச் செய்வதற்கு தேவையான வழிகாட்டல்கள் தொடர்பில் வலைப்பின்னல் முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை உள்ளடக்கப்பட்ட பயிற்சி வழங்க வேண்டும்.

- கணினி வலைப்பின்னல் கட்டமைப்பு 4 மேற்கொள்ளல் மற்றும் முகாமைத்துவம் (Network Configuration and Management)
- Server Configuration

## 2.5 <u>இணையத்தைப் பயன்படுத்தல் தொடர்பான ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை</u>

1. இணையத்தை பயனுறு முறையில் பயன்படுத்தல் சம்பந்தமாக பாடசாலையில் உள்ளக ஒழுங்குமுறை மேற்கொள்ளப்பட வேண்டும்.
   நாளாந்த இணைய பயன்பாடு பற்றிய அறிக்கையேடு, கணினி ஆய்வு கூட அறிக்கையேடு, வகுப்பு அறிக்கையேடு, .... முதலியன கணினி ஆய்வு கூடத்தில் இணையப் பயன்படுத்தல் ஒழுங்குமுறைக்கு பயன்படுத்தக் கூடியவை.
   (அது தொடர்பில் பொருத்தமான மென்பொருளையும் பயன்படுத்தலாம்).

2. மாதாந்த பயன்பாடு தொடர்பான (Usage) பரிசீலனையொன்றை பாடசாலைக்கு மேலதிகமாக வலயக் கல்வி அலுவலகம், மாகாண கல்வித் திணைக்களம் அல்லது கல்வி அமைச்சு மூலமாக மேற்கொள்வதற்கு ஒரு செயன்முறையையும் குறித்த சேவை வழங்குரிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## 2.6 <u>இணையத் தொகுப்பைக் கைவிடல் அல்லது பயன்யபடுத்தும் பெக்கேஜை மாற்றுதல்.</u>

பாடசாலை மூலம் பெற்றுக் கொண்ட இணையத் தொகுப்பின் மூலம் பயனுள்ள பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டால் சேவை வழங்குநருக்கு அறிவித்த பின்னர் தொகுப்பைக் கைவிடுவதற்கு அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு காரணத்துடன் வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பக் கிளைக்கு அறிவிக்க வேண்டும்.

தற்போது பயன்படுத்தப்படும் தொழினுட்பம் பாடசாலையின் தற்போதைய தேவை மற்றும் இணைய சேவை வழங்குநர்களின் தற்போதைய இணைய சேவை வசதி வழங்கும் ஆற்றல் என்பவற்றைப் பரிசீலனை செய்த பின்னரே இணைப்பு 02 மூலம் வழங்கப்பட்ட இணைய பெக்கேஜ்களுக்கு உரிய விபரக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் உருவாகும் தொழினுட்ட மாற்றங்கள் மற்றும் பாடசாலைத் தேவைப்பாடுக்கு அமைய இந்த விபரக் குறிப்புகளுக்கு மாறான வேறு இணையத் தொகுப்பு அறிமுகப்படுத்தல் இடம் பெற்றால் அதற்கு மாறிக் கொள்ளும் உரிமை பாடசாலை அதிகாரிகளுக்கு உண்டு.

பாடசாலை மூலம் பெற்றுக் கொண்ட பெக்கேஜ் பாடசாலைத் தேவைப்பாட்டுக்கு பொருத்தமானது அல்ல என்று தெரிந்தால் பாடசாலை முகாமைத்துவ குழுவின் பரிந்துரைக்கு அமைய வேறு பெக்கேஜுக்கு மாறிக்கொள்ளலாம். இந்த மாற்றத்தை நிதி அடிப்படையில் நட்டமானதாக இருக்காதவாறு மேற்கொள்ள முடியும். பெக்கேஜை மாற்றுவதாயின் அந்த மாற்றத்தை மேற்கொண்ட பின்னர் கல்வி அமைச்சு மற்றும் மாகாண, வலய அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும். இதன் போது பணக் கொடுப்பனவு தேவையாயின் அதைப் பாடசாலையே பொறுப்பேற்க வேண்டும்.

## 3.0 <u>பாடசாலை உள்ளக கணினி வலையமைப்பு</u>

பாடசாலையால் பெற்றுக் கொள்ளப்பட்ட இணையத் தொடர்பைப் பயன்படுத்துவதற்கு தேவையான உள்ளக வலையமைப்பு (Network) முறைமையை தயாரித்துக் கொள்ள வேண்டும். அதன் பொருட்டு கீழ் வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.

- வலையமைப்புடனோ அல்லது வலையமைப் இல்லாமலோ தயாரித்தல்.
- தேவைக்கு ஏற்ப வலையமைப்பை பெருப்பிப்பதற்கு switches மற்றும் access point ஐப் பயன்படுத்தல்.
- புதிய வலையமைப்பை அமைக்கும் போது மாற்றுவதாயில் வேகம் 10/100/1000 Mbps-switches மற்றும் Cat 6 கொண்டு மேல்வரும் தொழினுட்ப தேவைக்கு பொருத்தமான உதிரிப் பாகஙடகளைப் பயன்படுத்துவது சிறந்தது.
- பொருத்தமான வலையமைப்பு கலைநுட்பத்தைப் (Architecture) பயன்படுத்தல். (உதா - Workgroup, Client-Server).
- இணைப் பாதுகாப்பு முறைகளுக்கு பொருத்தமான மென்பொருள் மற்றும் தொழினுட்பத்தைப் பயன்படுத்தல்.

**4.0** <u>**2016/01 சுற்றறிக்கை 3 (அ) க்கு அமைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்பு சுமத்தப்படுகின்றது.**</u>

- கணினி வலையமைப்பு பயன்படுத்தலை கண்காணித்தல்.
- இணைய தொகுப்பு குறைகளை அறிக்கை செய்தல்.
- ஜேர்னல் ஒன்றை பேணி வரல்.
- தேவையான தகவலை அதிபர் ஊடாக வலய / மாகாண / கல்வி அமைச்சுக்கு அனுப்புதல்.
- இணையத்தை முறைகேடாகப் பயன்படுத்தலைத் தவிர்ப்பதற்கு உரிய செயன்முறையைப் பின்பற்றல்.
- பாடசாலையின் தேவைப்பாடுக்கு ஏற்ப வலையமைப்பை நவீனப்படுத்துவதற்குத் தேவையான பரிந்துரையை பாடசாலை கணினி ஆய்வு கூட முகாமைத்துவக் குழுவிடம் பெற்றுக்கொள்ளல்.
- பாதுகாப்பாக இணையத்தைப் பயன்படுத்தல் தொடர்பில் ஆலோசனை வழங்கல், வழி காட்டல், பாடசாலை அறிவுறுத்தல் வழிகாட்டல் சஞ்சிகையை வெளியிடல்.
- தொடர்ந்தும் பயன்படுத்தக் கூடிய மென்பொருளைப் பதிவிறக்கம் (download) செய்து சேர்வர் (Server) ஒன்றை நிறுவுதல்.

**இணைப்பு 01**

பாடசாலையின் பெயர் -
மாணவரின் பெயர் -
தரம் -

**மாணவரின் உறுதிமொழி**

பாடசாலையால் அனுமதிக்கப்பட்ட இணையத்தை பயன்படுத்தல் பற்றிய கொள்கைத் திட்டத்தை பின்பற்றுவதற்கு இணங்குகிறேன். பாடசாலையில் மிகத் தெளிவாக நடைமுறைப்படுத்தப்படும் அந்த கொள்கைத் திட்டம் முழுவதையும் நான் சரியாக விளங்கிக்கொண்டேன் என்றும் குறிப்பிடுகின்றேன்.

....................................

மாணவரின் ஒப்பம் திகதி - ..........................................

**பெற்றோரின் / பாதுகாவலரின் உறுதிமொழி**

**மேலே குறித்த பிள்ளையினுடைய நிரந்தர பாதுகாவலர் என்ற வகையில் பாடசாலையால் அனுமதிக்கப்பட்ட** இணையத்தை பயன்படுத்தல் பற்றிய கொள்கைத் திட்டத்துக்கு அமைவாக இணையத்தை பயன்படுத்துவதற்கு அவருக்கு அனுமதி வழங்குகின்றேன். அந்த பயன்படுத்தலானது கல்வி விடயங்களுக்கு மாத்திரம் என்றும், பாடசாலை மூலம் அவர் இணையத்தை பாதுகாப்பாக பயன்படுத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்றும், அவர் வெப் தளத்தை பொருத்தமற்றமுறையில் பயன்படுத்தினால் அது தொடர்பிலான வகைகூறல் பாடசாலைக்கு இல்லை என்றும் ஏற்றுக்கொள்கின்றேன்.

.................................

பெற்றோரின் / பாதுகாவலரின் ஒப்பம் திகதி - ....................................................

**மாணவர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலரின் உறுதிமொழி தொடர்பான அறிவுறுத்தல்கள்**

- பொருத்தமற்ற இணைத்தில் நுழைவதைத் தவிர்க்கும் Web-filtering Software ஊடாக முறையில் தடைசெய்து பாடசாலைக்கு வழங்கப்படுகிறது. அத்துடன் அந்த பாதுகாப்பு முறைக்கு அப்பால் செயற்படலாகாது.
- ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகிய இருபகுதியினருக்கும் பாதுகாப்பாக இணையத்தைப் தொடர்பாக பயிற்சியளித்தல் மற்றும் விளக்கமளித்தல் கல்வி அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களம், வலக கல்வி அலுவலகங்கள் மற்றும் பாடசாலையால் வழங்கப்படும்.
- கற்றல் செயற்பாடுகளுக்கு வெளியாரின் அனுமதியற்ற மென்பொருளை பதிவேற்றம் (Upload) செய்தல் மற்றும் பதிவிறக்கம் (Download) செய்தல் என்பவற்றுக்கு அனுமதி இல்லை.
- வைரஸ்தடுப்பு மென்பொருளை எப்போதும் இற்றைப்படுத்தல் வேண்டும்.
- ஆசிரியர்களின் அனுமதியின்றி எந்தவொரு சேமிப்பு ஊடகத்தையும் (CD, DVD, Pen Drive, etc) பயன்படுத்தக் கூடாது. வழங்கப்படமாட்டாது.
- பாடசாலைக்கு அல்லது பாடசாலை மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இழுக்கு ஏற்படாவண்ணம் ணையத்தைப் பயன்படுத்த வேண்டும்.
- சட்ட விரோத பொருத்தமற்ற வெப் தளத்துக்குள் அல்லது வேறு ஊடகத்துக்குள் மனம் விரும்பி நுழையக்கூடாது.
- அவசரத்தில் அறியாத்தனமாக அல்லது தவறாக மாணவரொருவர் அவ்வாறான பொருத்தமற்ற வெப் தளத்தில் நுழைந்தால் அது தொடர்பில் உடனடியாக நிர்வா ஆசிரியருக்கு (Administrator) அறிக்கையிட வேண்டும்.
- மாணவர்கள் கல்வித் தேவைகளுக்கு மாத்திரமே இணைய வசதியைப் பயன்படுத்த முடியும்.
- இணையத்தின் ஊடாக (வெப் தளம் அல்லாது வேறு ஊடகம்) யாதேனும் தகவலைப் பதிவிறக்கம் செய்து வேறு தேவைக்குப் பயன்படுத்துவதாயின் அதன் வெளியீட்டுரிமையைக் குறிப்பிட வேண்டும்.
- எக்காரணம் கொண்டும் தனிப்பட்ட தகவலை இணைத்தில் பதிவிடலை அல்லது வெளியிடுதலைத் தவிர்த்தல் வேண்டும்.
- பாடசாலையின் தகவல் தொழினுட்ப கொள்கைக்கு ஊறு விளைவிக்கும் எந்த தகவலையும் வெளியிடுவதை தவிர்க்க வேண்டும்.
- இணையத்தைப் பயன்படுத்தி செய்யப்படும் சகல விடங்களும் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கு உரியவை என்று மாணவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**மின்னஞ்சல் (E-Mail)**

- ஆசிரியரின் அனுமதி மற்றும் கட்டுப்பாட்டின் பேரில் பாடசாலையில் மின்னஞ்சலைப் பயன்படுத்த வேண்டும்.
- சட்ட விரோத அல்லது பொருத்தமற்ற அல்லது வேறு யாருக்கும் தொந்தரவு ஏற்படுத்தும் எந்தவொரு தகவலையும் மின்னஞ்சல் மூலம் பரிமாற்றம் செய்தல் ஆகாது.
- தனது அல்லது வேறு எவரதும் தனிப்பட்ட தகவல்களை (முகவரி, தொலைபேசி இலக்கம், நிழற்படம்) மின்னஞ்சல் ஊடாக பரிமாற்றம் செயல் ஆகாது.
- மின்னஞ்சல் மூலமாக அல்லது இணையம் மூலமாக அறியப்பட்ட எந்தவொரு தனிநபருடனும் நேருக்கு நேர் விவாதம் செய்தல் ஆகாது.
- மின்னஞ்சல் மூலம் இணைப்புகளை அனுப்பும்போது ஆசிரியரின் அனுமதியுடன் அனுப்ப வேண்டும்.

**<u>இணையத்தில் அளவளாவுதல் (Internet Chat)</u>**

- இணையத்தில் அளவளாவுவதற்கு பாடசாலையில் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.
- கல்வி விடயங்களுக்கு மாத்திரம் இணையத்தில் அளவளாவுதலை மேற்கொள்ள முடியும், அதுவும் ஆசிரியரின் கட்டுப்பாட்டுக்குள் இடம் பெற வேண்டும்.

<u>வெப் தளம் (Web Site)</u>

- அனுமதிக்கப்பட்ட பாடப் உள்ளடகத்தை மாத்திரமே பாடசாலையின் வெப் தளத்தில் வெளியிடுவதற்கு மாணவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்.
- வெப் தளத்தில் மாணவரின் தகவல், நிழற்படம் மற்றும் ஆக்கத்தை வெளியிடுவதானால், அதற்கு பெற்றோரின் அனுமதியைப் பெற்றுக் கோண்ண வேண்டும்.
- அனுமதியுடன் பாடசாலை வெப் தளத்தில் மாணவரின் ஆக்கத்தை வெளியிட்டால், அதன் உரிமை மாணவருக்கே உரியது.

<u>தனிப்பட்ட கருவி - Personal Device</u>

- இணைய பயன்படுத்தல் கொள்கைக்கு அமைய மாணவர் தமது தனிப்பட்ட கருவிகளைப் பயன்படுத்தி நிழற்படம் அல்லது வீடியோ எடுத்தல், அனுப்புதல், இணையத்தில் நுழைதல் முதலான செயல்களை பாடசாலையில் மேற்கொள்ள முடியாது.

<u>மேற்கூறப்பட்ட அறிவுறுத்தல்கள் மீறப்படும் சந்தர்ப்பங்களில்,</u>

- ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் (எழுத்து மூலமான எச்சரிக்கை, குறுகியகால இணைய நுழைவுத் தடைசெய்தல் முதலியன).
- இவ்வாறான தவறான செயல்களை தொடர்ந்து செய்தால் மேலதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யப்படும்.

இணைப்பு 02 – திருத்தம்

பாடசாலை மற்றும் பிரிவேனாக்களுக்கு 2017-ம் ஆண்டில் வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்ட

இணையம் தொடர்பான பெக்கேஜ் மற்றும் இணைய சேவை வழங்குநர்கள்

| விபரம் | | பெக்கேஜ் 1 | பெக்கேஜ் 2 | பெக்கேஜ் 3 | பெக்கேஜ் 4 | பெக்கேஜ் 5 | பெக்கேஜ் 6 | பெக்கேஜ் 7 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. குறைந்த பதிவிறக்க வேகம் (Minimum Download Bandwidth) | | 2 Mbps | 5 Mbps | 1 Mbps | 10 Mbps | 20 Mbps | 50 Mbps | 75 Mbps |
| 2. குறைந்த பதிவேற்ற வேகம் (Minimum Upload Bandwidth) | | 512 Kbps | 1 Mbps | 1 Mbps | 1 Mbps | 1 Mbps | 2 Mbps | 25 Mbps |
| 3. இணையத்தைப் பயன்படுத்துகையில் ஒருமித்து பயன்படுத்தும் கருவிகளின் அதிகூடிய எண்ணிக்கை | | 10 | 15 | 25 | 40 | 60 | 100 | 200 |
| 4. மாதாந்த தரவுத் தேவைப்பாடு (காலநேரத்துக்கு ஏற்ப மட்டுப்படுத்தாமல்) | | 50 GB | 100 GB | 200 GB | 300 GB | 500 GB | 750 GB | 1 TB |
| 5. வெப் பில்டரிங் வசதிகள் | | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு |
| 6. CPE (Router) துணைக்கருவியில் இருக்க வேண்டிய குறைந்த Ethernet Port எண்ணிக்கை (Wi-Fi வசதியுடன்) | | Wi-Fi வசதியுடன் கூடிய குறைந்த Ethernet Port எண்ணிக்கை 02 | Wi-Fi வசதியுடன் கூடிய குறைந்த Ethernet Port எண்ணிக்கை 02 | Wi-Fi வசதியுடன் கூடிய குறைந்த Ethernet Port எண்ணிக்கை 04 | Wi-Fi வசதியுடன் கூடிய குறைந்த Ethernet Port எண்ணிக்கை 04 | Wi-Fi வசதியுடன் கூடிய குறைந்த Ethernet Port எண்ணிக்கை 04 | Wi-Fi வசதியுடன் கூடிய குறைந்த Ethernet Port எண்ணிக்கை 04 | Wi-Fi வசதியுடன் கூடிய குறைந்த Ethernet Port எண்ணிக்கை 08 |
| மாதாந்த கட்டணம் (சகல வரிகளும் நீங்கலாக ரூபா.) | | | | | | | | |
| இலங்கை டெலிகொம் நிறுவனம் | மாதாந்த கட்டணம் | 1,550/- | - | 6,600/- | 9,600/- | 15,200/- | 22,200/- | 28,000/- |
| | மேலதிக தரவுகளுக்கான கட்டணம் | 1GB க்கு 50/- | - | 1GB க்கு 50/- | 1GB க்கு 50/- | 1GB க்கு 50/- | 1GB க்கு 50/- | 1GB க்கு 50/- |
| டயலொக் ஆசியாட்டா | மாதாந்த கட்டணம் | - | 1,500/- | - | - | - | - | - |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நிறுவனம் | மேலதிக தரவுகளுக்கான கட்டணம் | - | 5GB க்கு 300/- மற்றும் 10 GB 500/- | - | - | - | - | - |

- ❖ மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் வரி சேர்க்காமல் குறிப்பிடப்பட்டுள்ளன. கட்டணம் செலுத்துகையில் இணையப் பயன்பாடுக்குரிய உரிய சகல வரிகளையும் சேர்த்தே கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

விசேட குறிப்பு - 2017 ஆண்டுக்கு ஏற்ப கிடைத்துள்ள விலைப் பட்டியலுக்கு அமைய மேலேயுள்ள கட்டணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பெக்கேஜ் இலக்கம் 1 மற்றும் பெக்கேஜ் இலக்கம் 2 தேவைப்பாடு நிலவும் பாடசாலைகள் டயலொக் நிறுவனத்தால் வழங்கப்படும் பெக்கேஜ் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தின் கீழே, பெக்கேஜ் இலக்கம் 2 இணையத் தொடப்புகளைப் பெற்றுக்கொள்வது பொருத்தமானது. மேலும், தொழினுட்ப அடிப்படையில் டயலொக் நிறுவனத்தின் இணைப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்பங்களில், பொருத்தமான முறையில் இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் பெக்கேஜ் இலக்கம் 2 மூலமாக குறித்த தேவையை நிறைவு செய்து கொள்ள வேண்டும.

பெக்கேஜ் 3, 4, 5, 6 மற்றும் 7 தேவைப்படும் சந்தர்ப்பங்களில் இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் மூலம் குறித்த இணைப்புகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**இணைப்பு 03**

**பாடசாலை மற்றும் பிரிவேனாக்களுக்கு இணைய வசதியை வழங்குதற்கு இணங்கியுள்ள இணைய சேவை வழங்குநர்களின் தொடர்புத் தகவல்கள்**

1. இலங்கை டெலிகொம் நிறுவனம்

    கொடுப்பனவு முகாமையாளர் – அரச வணிகம்

    தொ/பே. இலக்கம் - 011-2303210 / 011-303214 / 071-8466523

    தொலைநகல் இலக்கம் - 011-2302585

    வெப் தளம் - www.slt.lk

2. டயலொக் புறோட்பாண்ட் நிறுவனம்

| மாகாணம் | பெயர் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| வட மாகாணம் | திருமதி ரஸ்னி சகாப்தீன் | 077-3336807 |
| கிழக்கு மாகாணம் | திரு ரவி கருணாரத்ன | 077-3339858 |
| வட மேல் மாகாணம் | திரு சிந்தக்க ஜயபண்டார | 077-7332415 |
| தென் மாகாணம் | திரு மொகமட் ரினாஸ் | 077-7334468 |
| ஊவா / சபரகமுவை மாகாணங்கள் | திரு எரங்க ரணசிங்க | 077-7334377 |
| கம்பகா / நீர்கொழும்பு பிரதேசங்கள் | திரு கபில இந்திரஜித் | 077-3336538 |
| கொழும்புப் பிரதேசம் / மேற்கு மாகாணம் | திரு சுமேத வீரசேகர | 077-7334261 |
| | திரு சனத் சிறிவர்தன, பொது அலுவலர் (புறோட்பாண்ட் அபிவிருத்தி மற்றும் விரிவாக்கல்) | 077-7336997 |

3. கல்வி அமைச்சின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பக் கிளை (யாதேனும் பிரச்சினை தொடர்பில் தேவையாயின் தொடர்பு கொள்ள)

    தொலைபேசி - 011-2784336

    தொலைநகல் - 011-2785821

**இணைப்பு 04**

கல்விப் பணிப்பாளர்
தகவல் மற்றும் தொடர்பால் தொழினுட்பக் கிளை
கல்வி அமைச்சு
“இசுறுபாயா”
பத்தரமுல்லை.

**பாடசாலைகள் / பிரிவேனாக்களுக்கு அதிவேக இணைய வசதிகள் வழங்கல்**

1. பாடசாலையின் பெயர் - ..................................................................................
2. தொலைபேசி இலக்கம் - ..................................................................................
3. மாகாணம் - ..................................................................................
4. வலயம் - ..................................................................................
5. Circuit ID/ Router No. - ..................................................................................

6. புதிய இணைய இணைப்பு வழங்கப்பட்ட திகதி - ..................................................................................
7. இணைப்பு வழங்கிய இணைய சேவை வழங்குநர் - ..................................................................................
8. வழங்கப்பட இணைப்புக்குரிய பெக்கேஜ் / பெக்கேஜ்கள் - ..................................................................................
9. இணையத் தொடர்பின் வேகம் - ..................................................................................
10. அதிபரின் / பிவேனாதிபரின் பெயர் - ..................................................................................
11. அதிபரின் / பிரிவேனாதிபதியின் இலக்கம் - .........................................................
12. புதிய இணைப்பு தொடர்பானது - ..........................................................................
    இணைப்பாளரான ஆசிரியரின் பெயர்
    ஆசிரியரின் தொலைபேசி இலக்கம் - .........................................................................
    கைத் தொலைபேசி இலக்கம் - ..................................................................
    மின்னஞ்சல் முகவரி - ..........................................................................................

குறித்த இணைய இணைப்பு உரிய முறையில் பொருத்தப்பட்டுள்ளது என்றும் பயன்படுத்தும் நிலையில் உள்ளது என்றும் சான்றுபடுத்துகின்றேன்.

.....................................................................

அதிபரின் / பிவேனாதிபதியின் ஒப்பம்

பதவி முத்திரை -

திகதி -

<u>இணைப்பு 02 – திருத்தம்</u>

<u>பாடசாலை மற்றும் பிரிவேனாக்களுக்கு 2017-ம் ஆண்டில் வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்ட</u>

<u>இணையம் தொடர்பான பெக்கேஜ் மற்றும் இணைய சேவை வழங்குநர்கள்</u>

| விபரம் | | பெக்கேஜ் 2 | பெக்கேஜ் 3 | பெக்கேஜ் 4 | பெக்கேஜ் 5 | பெக்கேஜ் 6 | பெக்கேஜ் 7 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. குறைந்த பதிவிறக்க வேகம் (Minimum Download Bandwidth) | | 5 Mbps | 1 Mbps | 10 Mbps | 20 Mbps | 50 Mbps | 75 Mbps |
| 2. குறைந்த பதிவேற்ற வேகம் (Minimum Upload Bandwidth) | | 1 Mbps | 1 Mbps | 1 Mbps | 1 Mbps | 2 Mbps | 25 Mbps |
| 3. இணையத்தைப் பயன்படுத்துகையில் ஒருமித்து பயன்படுத்தும் கருவிகளின் அதிகூடிய எண்ணிக்கை | | 15 | 25 | 40 | 60 | 100 | 200 |
| 4. மாதாந்த தரவுத் தேவைப்பாடு (காலநேரத்துக்கு ஏற்ப மட்டுப்படுத்தாமல்) | | 100 GB | 200 GB | 300 GB | 500 GB | 750 GB | 1 TB |
| 5. வெப் பில்டரிங் வசதிகள் | | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு |
| 6. CPE (Router) துணைக்கருவியில் இருக்க வேண்டிய குறைந்த Ethernet Port எண்ணிக்கை (Wi-Fi வசதியுடன்) | | Wi-Fi வசதியுடன் கூடிய குறைந்த Ethernet Port எண்ணிக்கை 02 | Wi-Fi வசதியுடன் கூடிய குறைந்த Ethernet Port எண்ணிக்கை 04 | Wi-Fi வசதியுடன் கூடிய குறைந்த Ethernet Port எண்ணிக்கை 04 | Wi-Fi வசதியுடன் கூடிய குறைந்த Ethernet Port எண்ணிக்கை 04 | Wi-Fi வசதியுடன் கூடிய குறைந்த Ethernet Port எண்ணிக்கை 04 | Wi-Fi வசதியுடன் கூடிய குறைந்த Ethernet Port எண்ணிக்கை 08 |
| இலங்கை டெலிகொம் நிறுவனம் | **மாதாந்த கட்டணம்** | 1,550/- | 6,600/- | 9,600/- | 15,200/- | 22,200/- | 28,000/- |
| | மேலதிக தரவுகளுக்கான கட்டணம் | 1GB க்கு 50/- | 1GB க்கு 50/- | 1GB க்கு 50/- | 1GB க்கு 50/- | 1GB க்கு 50/- | 1GB க்கு 50/- |
| டயலொக் ஆசியாட்டா நிறுவனம் | **மாதாந்த கட்டணம்** | 1,500/- | - | - | - | - | - |
| | மேலதிக தரவுகளுக்கான கட்டணம் | 5GB க்கு 300/- மற்றும் 10 GB 500/- | - | - | - | - | - |

- ❖ மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் வரி சேர்க்காமல் குறிப்பிடப்பட்டுள்ளன. கட்டணம் செலுத்துகையில் இணையப் பயன்பாடுக்குரிய உரிய சகல வரிகளையும் சேர்த்தே கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

விசேட குறிப்பு - 2017 ஆண்டுக்கு ஏற்ப கிடைத்துள்ள விலைப் பட்டியலுக்கு அமைய மேலேயுள்ள கட்டணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பெக்கேஜ் இலக்கம் 2 தேவைப்பாடு நிலவும் பாடசாலைகள் வழங்கும் தொகுப்பின் வேகம், கவரேஜ் ஆற்றலை பரிசீலனை செய்து மிகப் பொருத்தமான சேவை வழங்குநர்கள் மூலம் உரிய தொகுப்பை பெற்றுக் கொள்ள வேண்டும்.

பெக்கேஜ் 3, 4, 5, 6 மற்றும் 7 தேவைப்படும் சந்தர்ப்பங்களில் இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் மூலம் குறித்த இணைப்புகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.